**செய்தி வெளியீடு எண்: 67** **நாள்: 15.08.2021**

# மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.பன்வாரிலால் புரோகித் அவர்கள் தலைமையில், சென்னை ஆளுநர் மாளிகை இல்லத்தில் சுதந்திர தின வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர், திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள், இன்று (15.08.2021) சென்னை ஆளுநர் மாளிகை இல்லத்தில் சுதந்திர தின வரவேற்பு நிகழ்ச்சிக்குத் தலைமையேற்று உரையாற்றினார்.

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், "நம் நாட்டின் 75–ஆம் சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழாவாகிய இன்று உங்களிடம் உரையாற்றுவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஆங்கிலேயரின் ஆட்சியில் இருந்து நம் நாட்டிற்கு விடுதலை பெற்றுத் தரவேண்டும் என்கிற உயரிய நோக்கத்திற்காக பல்வேறு இன்னல்களைத் தாங்கிய துணிவுமிக்க தியாகியருக்கு, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்ச்சியில் அஞ்சலி செலுத்த விரும்புகிறேன். நம் நாடு முன்னேற்றப் பாதையில் பீடுநடை போட வகைசெய்த அனைவருக்கும் நம் நன்றியைத் தெரிவிப்போம்.

அண்மையில், 1971 ஆண்டு நடைபெற்ற இந்தியா–பாகிஸ்தான் போரின் பொன்விழா வெற்றிக் கொண்டாட்டத்தின் தலைமை விருந்தினராகப் பங்கேற்று, போரில் தாய்நாட்டிற்காகப் போராடிய வீரர்களைப் பெருமைப்படுத்தினேன். இத்தகைய வரலாற்று நிகழ்வில் கலந்து கொண்டதில் நான் பெருமையடைகிறேன்.

சுதந்திர தினத்தின் இந்த மகிழ்ச்சியான வேளையில், நமது நாடு பல்வேறு துறைகளில் அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் குறித்து நாம் பெருமை கொள்வோம். உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியா வீறு நடை போடும் இத்தருணத்தில், ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் பண்பாட்டு விழுமியங்களை நிலைநாட்டவும், அதன் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை வலுப்படுத்தவும் பணியாற்ற வேண்டும்.

செழுமையான பண்பாடு, பழமையான மொழி மற்றும் நட்பு பாராட்டும் மக்களின் உறைவிடமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. சிறப்பான உட்கட்டமைப்பையும், திறன்மிகு பணிச் சூழலையும் இம்மாநிலம் பெற்றுள்ளது. மாநில அரசின் அயராத முயற்சிகளின் காரணமாக, தமிழ்நாடு பல துறைகளில் இந்தியாவிலேயே முதலிடம் பெற்றுள்ளது. நீங்கள் அனைவரும் முழு வெளிப்படைத்தன்மையுடன் கடினமாக உழைக்க வேண்டும் என்றும் மக்களுக்கு ஊழல் இல்லாத நிருவாகத்தை வழங்க வேண்டுமென்றும் அனைத்துத் துறைகளிலும் மாநிலத்தை முதலிடத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் நான் விழைகிறேன்.

"நீங்கள் பார்த்த மிகவும் ஏழையான மற்றும் பலவீனமான ஆண் அல்லது பெண்ணின் முகத்தை நினைத்துப் பாருங்கள். நீங்கள் செய்யக் கருதும் செயல்பாடுகள், அவருக்கு ஏதேனுமொரு வகையில் நன்மை பயக்குமா என உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்" என்னும் மகாத்மா காந்தியின் புகழ்மிக்க வரிகளை இப்போது நினைவுகூர விரும்புகிறேன். மகாத்மா காந்தியின் இந்த எதிர்பார்ப்பு முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும் போது சுதந்தரத்தின் சிறப்பு உண்மையாக உணரப்படும்.

தமிழ்நாட்டிலிருந்து டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற செல்வி பவானி தேவியையும் ஏனைய ஒலிம்பிக் வீரர்களையும் நான் வாழ்த்துகிறேன். அனைத்து வகையிலும் அவர்களுக்கு உதவுவதில் மாநில அரசு எடுத்த முயற்சிகளை நான் பாராட்டுகிறேன். ஒலிம்பிக் போட்டிகள் மற்றும் ஏனைய உலக அளவிலான போட்டிகளுக்கான விளையாட்டுத் திறமைகளை அடையாளம் காணும் சிறப்பான முயற்சியை மாநில அரசு தொடர்ந்து மேற்கொள்வதுடன் நம் நாட்டிற்கு அதிக பதக்கங்களை வென்று தரும் வகையில், அவர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் அளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டில், கோவிட்–19 பெருந்தொற்றின் இரண்டாவது அலையை எதிர்த்துப் போராட ஒரு குழுவாக அயராது பணியாற்றிய முதலமைச்சரையும் மொத்த அரசு இயந்திரத்தையும் அதிலும் குறிப்பாக முன்களப் பணியாளர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், அனைத்து சுகாதாரப் பணியாளர்கள், வருவாய், காவல்துறை, உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏனைய துறைகளையும் நான் வாழ்த்துகிறேன். தமிழ்நாட்டில் கோவிட் நெறிமுறைகளைத் தவறாது பின்பற்றுவதன் வாயிலாகவும் 100% கோவிட் தடுப்பூசியை எடுத்துக் கொள்வதன் வாயிலாகவும் தமிழக மக்கள் அரசிற்குத் தங்கள் ஒத்துழைப்பைத் தொடர்ந்து அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் இராணுவத்தினர்களின் நனிசிறந்த சேவைகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, அவர்களின் நலன்கருதி, ஆயுதப்படை கொடி நாள் நிதிக்குத் தாராளமாக நன்கொடையளிக்க வேண்டுமென்று நான் தமிழ்நாட்டு மக்களைக் கேட்டுக்கொள்கிறேன். கொடி நாள் வசூலில் சிறப்பான சாதனைகளுக்காக விருது பெற்ற அனைவரையும் நான் வாழ்த்துகிறேன்.

நாடு முழுவதிலும் உள்ள மக்கள் நமது 75–ஆவது சுதந்திர தினத்தைச் சிறப்பாகவும் பாரம்பரிய உற்சாகத்துடனும் கொண்டாடுகிறார்கள். வருகைபுரிந்துள்ள அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கும், மேலும் உங்கள் வாயிலாக தமிழ்நாட்டு மக்களுக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் சுதந்திர உணர்வு எட்டுத்திக்கும் பரவட்டும். இந்தியாவை உயர் நிலைக்கு இட்டுச் செல்ல நம்மை ஊக்குவிக்கும் உயிர்மூச்சாகத் தேசப்பற்று திகழட்டும்" என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் மாண்புமிகு சபாநாயகர், திரு. எம். அப்பாவு, மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, திரு சஞ்ஜீப் பானர்ஜி, மாண்புமிகு அமைச்சர்கள், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர் டாக்டர் வி. இறையன்பு, இ.ஆ.ப, ஆளுநரின் செயலாளர் திரு ஆனந்தராவ் வி.பாட்டீல், இ.ஆ.ப., மற்றும் ஏனைய உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

---

ஆளுநர் மாளிகை, சென்னை– 22

நாள்:15.08.2021

ஒப்பம்/–

கூடுதல் இயக்குநர் (மக்கள் தொடர்பு)

**Press Release No.67** **Date : 15.08.2021**

**Hon'ble Governor of Tamil Nadu, Thiru Banwarilal Purohit hosts Independence Day Reception "At Home" at Raj Bhavan, Chennai**

Thiru. Banwarilal Purohit, Hon'ble Governor of Tamil Nadu hosts Independence Day Reception "At Home" at Raj Bhavan, Chennai today (15.08.2021) and addressed the gathering.

Hon'ble Governor said, "It is a matter of great privilege for me to address you all on this occasion of our 75$^{th}$ Independence Day -"Azadi Ka Amrut Mahotsav".

On this historic occasion, I wish to pay my tributes to all those brave souls who suffered and sacrificed for the noble cause of our country's freedom from British rule. Let us express our gratitude to all those who enabled our country to move forward on the path of progress.

Recently, I participated as Chief Guest in the Golden Jubilee Celebration of 1971 India-Pakistan War "Swarnim Vijay Varsh" and honoured the veterans who fought for the Motherland in the war. It was my honour to take part in that historic event.

On this joyous occasion of Independence Day, let us take pride in the remarkable progress achieved by our nation in various fields. As India marches ahead as one of the fastest-growing economies in the world, every citizen should work towards upholding the country's civilizational values and strengthening its unity and integrity.

Tamil Nadu is home to a rich culture, an ancient language and friendly people. The State has very good infrastructure, and efficient work-culture. Untiring efforts of State Government has made Tamil Nadu Number One State in India in many fields. I expect all of you to work hard with total transparency and give corruption-free administration to people and make the State Number One state in all the fields.

I recall the famous quotation of Mahatma Gandhi that reads as follows – "Recall the face of the poorest and the weakest man or woman whom you may have seen and ask yourself if the step you contemplate is going to be of any use to him or her". The true essence of freedom will have been realised when this expectation of Mahatma Gandhi is fully put into practice.

I congratulate Ms. Bhavani Devi and other Olympians from Tamil Nadu for participating in Tokyo Olympic Games. I appreciate efforts taken by the State Government in supporting them in all aspects. State Government should continue good work in identifying talent in sports for Olympics and other world-level competitions and provide them all facilities to get more medals for the Nation.

I congratulate the Chief Minister and the entire Government machinery, particularly the frontline workers, doctors, nurses, all Health workers, Revenue, Police, Local bodies and other departments, who have tirelessly worked as a team to combat the second wave of COVID-19 pandemic in Tamil Nadu. I appeal to the people of Tamil Nadu to continue their co-operation to the Government by following the COVID Protocols strictly and achieve 100% COVID vaccination.

I also appeal to the people of Tamil Nadu to express their gratitude towards the invaluable services rendered by our Ex-Servicemen population by donating generously to the Armed Forces Flag Day Fund, which is dedicated for their welfare. I congratulate all the awardees for best achievements in Flag Day collection.

People all over the country are celebrating our 75th Independence Day with ceremonial splendour and cultural gaiety. I extend my warm greetings and good wishes to all the distinguished invitees and through you to the people of Tamil Nadu. May the spirit of our freedom fill the air and devotion to the nation be the life-breath that sustains and inspires us to take India to highest level.

On this occasion, Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu, Thiru M. Appavu, Hon'ble Speaker of the Tamil Nadu Legislative Assembly, Thiru Sanjib Banerjee, Hon'ble Chief Justice of Madras High Court, Hon'ble Ministers, Dr. V. Irai Anbu, I.A.S., Chief Secretary, Government of Tamil Nadu, Thiru Anandrao V. Patil, I.A.S., Secretary to Governor and other dignitaries participated.

---

Raj Bhavan, Chennai – 22 Sd/-

Date : 15.08.2021 Addl. Director (PR)